**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்போரூர்**

**DEPOSITION OF WITNESSES**

(Chapter XXIII Cr.P.C)

**CC NO. 23/2022**

**PW. 4**

**Date: 23.10.2025**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. தமிழ்செல்வன் (கிராம நிர்வாக அலுவலர்) | சாதி | |
| கணவர்/தந்தை பெயர் | | மதம் | |
| கிராமம் | | தொழில் | |
| வட்டம் | | வயது | 57 |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969, (Central Act 44 of 1969) on the **23th October 2025**

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

1 முதல் 4 எதிரிகள் ஆஜர். 5 ஆம் எதிரி ஆஜர் இல்லை. பிரிவு 317 கு.வி.மு.ச கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.

**முதல் விசாரணை :**

**1.** நான் தற்போது காரனை கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி வருகிறேன். ஆஜர் எதிரிகளையும் எதிரி பிரதாபன் என்பவரையும் எனக்கு நன்கு தெரியும். கடந்த 18/12/2018 அன்று காலை 09.00 மணியளவில் அ.சா.3 வுடன் பஞ்ச திருத்தி கிராமத்திற்கு வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு பணிக்காக அங்குள்ள ஜெகதீசன் நகருக்கு சென்றோம். அந்த பகுதி பொதுமக்கள் அனைவரும் எங்களை சூழ்ந்து கொண்டார்கள்.

நான் கூட்டத்தின் பின்புறத்தில் இருந்ததால் உள்ளே என்ன நடந்தது என்று எனக்கு தெரியவில்லை. ஆஜர் 1 ஆம் எதிரி அ.சா.1 ஐ தாக்கியதாக சொன்னார்கள். அ.சா.3 வட்டாட்சியருக்கு தொடர்பு கொண்டு தேர்தல் பணி செய்தபோது அ.சா.1 ஐ தாக்கியதாக தகவல் சொன்னார். காவல் நிலையத்திற்கும் தகவல் சொன்னார். அங்கு தகராறு நடந்ததால் நாங்கள் அங்கிருந்து திரும்பி வந்து விட்டோம். போலீசார் என்னை விசாரணைசெய்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜரியில் இருந்தும் குறுக்கு விசாரணை இல்லை.

S/d- K. Nilavarasan, 23.10.2025
District Munsif cum Judicial Magistrate,
Thiruporur

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்போரூர்**

**DEPOSITION OF WITNESSES**

(Chapter XXIII Cr.P.C)

**CC NO. 23/2022**

**PW. 3**

**Date: 23.10.2025**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. தமிழரசன் (தனி வட்டாச்சியர்) | சாதி | |
| கணவர்/தந்தை பெயர் | | மதம் | |
| கிராமம் | | தொழில் | |
| வட்டம் | | வயது | 38 |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969, (Central Act 44 of 1969) on the **23th October 2025**

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

1 முதல் 4 எதிரிகள் ஆஜர்.5 ஆம் எதிரி ஆஜர் இல்லை. பிரிவு 317 கு.வி.மு.ச கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.

**முதல் விசாரணை :**

**1.** நான் தற்போது செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தனி வட்டாட்சியர் ஆக பணியாற்றி வருகிறேன். ஆஜர் எதிரிகள் மற்றும் எதிரி பிரதாபன் ஆகியோர்களை எனக்கு தெரியும் அவர்கள் இன்னும் பட்டு கிராமத்தை சேர்ந்தவர்கள். கடந்த 08/12/2018 அன்று காலை 09.30 மணியளவில் பஞ்சதிருத்தி கிராமத்தில் உள்ள ஜெகதீசன் நகருக்கு வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு பணிக்காக நானும் கிராம உதவியாளர் அ.சா.1 ஆமூர் கிராம உதவியாளர் சாட்சி தமிழ்ச்செல்வன், சாட்சி முனுசாமி ஆகியோர் சென்றிருந்தோம். ஆஜர் 1 ஆம் எதிரியுடன் பிறகு எதிரிகளும் ஒன்று சேர்ந்து யாரும் அந்த பகுதிக்குள் வரக்கூடாது என்று தகராறு செய்து

எங்கள் அரசு பணியை தடை செய்தார்கள்.

2. பேசிக் கொண்டிருந்தபோது அ.சா.1 ஐ 1 ஆம் எதிரி கையால் கன்னத்தில் அறைந்தார். தகாத வார்த்தைகளாலும் திட்டினார். அவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து எங்களை சூழ்ந்து கொண்டு மடக்கினார்கள். எங்களை வெளியில் செல்ல அனுமதிக்கவில்லை. எதிரிகளை மீறி உள்ளே வரக்கூடாது என்றும் அவர்களிடம் அனுமதி கேட்டு தான் உள்ளே செல்ல வேண்டும் என்றும் சொன்னார்கள். சம்பவம் சம்பந்தமாக நான் வட்டாட்சியருக்கு தகவல் தெரிவித்தேன். காவல் நிலையத்திற்கும் தகவல் தெரிவித்தேன். இது சம்பந்தமாக காவல் உதவி ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜரியில் இருந்தும் குறுக்கு விசாரணை இல்லை.

S/d- K. Nilavarasan, 23.10.2025

District Munsif cum Judicial Magistrate,
Thiruporur